சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. 15/2020

பெயர்:விஜயா வா.சா.1 தேதி **19.11.2025**

4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) என் தாயார் சிறும்பாயை மாணிக்க கவுண்டருக்கு இரண்டாம் தாரமாக திருமணம் செய்தார் என்றால் சரியல்ல. நான் மற்ற பிரதிவாதிகளை ஏமாற்ற வேண்டும் என்கின்ற நோக்கத்தில் எனது தாயார் தான் மாணிக்க கவுண்டரின் முதல் தாரம் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்துக்களின் நான்கெல்லை, சர்வே எண், பட்டா எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கும், 4, 5 பிரதிவாதிகளுக்கும் விரோதம் எதுவும் இல்லை. என் தந்தை 4, 5 பிரதிவாதிகளுக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான், ஆனால் அது எங்களுக்கு தெரியாமல் எழுதி கொடுத்துவிட்டார். மேற்படி எனது தகப்பனார் 4,5 பிரதிவாதிகளுக்கு பாகம் பிரித்துத்தான் எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சொத்தினை 4,5 பிரதிவாதிகள் மட்டும் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் இல்லை நானும் சேர்த்து தான் அனுபவம் செய்து வருகிறேன். நான் வழக்குச்சொத்துக்களை அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2) வழக்குச்சொத்துக்களின் பட்டா 4, 5 பிரதிவாதிகள் பெயரில் தான் உள்ளது என்றால் எங்கள் பெயரிலும் உள்ளது. எங்கள் பெயரில் பட்டா உள்ளது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்குச்சொத்துக்களை அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல, வழக்குச்சொத்தில் உரிமையில்லை என்பதால் தான் என் பெயருக்கு பட்டா ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் முழுவதும் மாணிக்க கவுண்டருக்கு தனித்து பாத்தியப்பட்டது என்பதால் தான் 4,5 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனக்கு எந்தவிதமான பாகமும், உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை 4,5 பிரதிவாதிகள் பெற்றதற்கு பின்னிட்டு நிலங்களை சீரமைத்து நல்ல நிலமாக மாற்றியுள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி நிலத்தை சீர்செய்வதற்கான செலவினை 4,5 பிரதிவாதிகள் தான் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

3) எனது தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தாரா என்றால் சரிதான். மேற்படி எனது தகப்பனாருக்கான மருத்துவசெலவினை 4,5 பிரதிவாதிகள் தான் பார்த்தார்கள் என்றால் சரியல்ல. என் தந்தை 4,5 பிரதிவாதிகளுக்கு தானசெட்டில்மெண்ட்

ஆவணம் பிறப்பித்துக்கொடுத்த சங்கதி தெரிந்து கொண்டே பொய்யாக வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து உரிமைகோர எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2025.11.19 18:29:40 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.